Registered as a Newspaper

**Globe Industries**
தங்கள் அச்சகத்திற்குத் தேவையான எல்லா நிற மை வகைகளும் எம்மிடம் உண்டு. விசேட கழிவுடன் தரப்படும்.
'GRAFO' INK 'GLOBE' INK
இன்றே நாடுங்கள்
173, 4th Cross Street,
JAFFNA.
T.Ph - 23187

# உதயன்

விலை ரூ. 1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

**Globe Industries**
தங்கள் அச்சகத்திற்குத் தேவையான எல்லா வகையான சாதிதாதிகளும் எம்மிடம் கையிருப்பில் உண்டு. விசேட கழிவுடன் தரப்படும்.
இன்றே நாடுங்கள்.
173, 4th Cross Street,
JAFFNA.
T.Ph - 23187

ஏடு:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு சித்திரை மீ 14 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ஷஃபா பிறை 17 (27-04-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:136

# அரசு ஆகக் கூடுதலாக வழங்கக் கூடியது என்ன?

## இதனை அறிவதே சிதம்பரம் குழுவின் முக்கிய பணியாக இருக்கும்

புதுடில்லி, ஏப்ரல் 26

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, அந்த நாட்டு அரசாங்கம் வழங்கக்கூடிய ஆகக் கூடுதல் நடைமுறைச் சாத்தியமான தீர்வு எது?

இதனைக் கண்டறிவதும், அதனை எழுத்தில் வாங்கி வருவதுமே இணையமைச்சர் திரு. பி சிதம்பரம் தலைமையில் கொழும்பு செல்லும் இந்தியத் தூதுக்குழுவின் முக்கிய பணியாக இருக்கும்.

இவ்வாறு அரசுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்முறை இந்தியா வெறும் பண்டாரியை இலங்கைக்கு அனுப்பவில்லை.

ஒரு முழு அளவிலான குழுவையே அனுப்புகின்றது.

தமிழருக்குச் சுயாட்சி வழங்குவது சம்பந்தமான இலங்கை அரசின் இறுதி வட்டமான கருத்தை அறிவதில்தான் இக்குழு முக்கியமாக ஈடுபடும்.

இந்திய மாநில சுயாட்சி அமைப்பில் எந்த அளவுக்கு இறங்கி வந்து தமிழருக்குச் சுயாட்சி வழங்க இலங்கை அரசு தயாராக இருக்கிறது என்பதனை அறிவதிலும் இந்தியக்குழு ஈடுபடும் என்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் 'இந்து' பத்திரிகையின் அரசியல் விமர்சகர் திரு. ஜி கே. ரெட்டி பின்வருமாறு எழுதி உள்ளார்:

ஒரு மொழி மாநிலம், தமிழரின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய அளவு நிறைவேற்று அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோரிக்கைகளை திரு. ஜெயவர்த்தனாவுக்குச் சமர்ப்பிக்க வேண்டியது இந்தியாவின் கடமை.

அந்தக் கடமையையும் இந்தியக் குழு நிறைவேற்றும்.

முடியுமானால் இது சம்பந்தமாக இலங்கை அரசிடம் இருந்து அதன் கருத்தை எழுத்து மூலம் இக்குழு பெறும்.

இம்முறை இந்திய அரசு, ஒரு தூதரை அனுப்பவில்லை. இரண்டு தூதர்களை அனுப்புகின்றது. அரசியல் சட்ட நிபுணர் ஒருவரையும் (4 ஆம் பக்கம் பார்க்க)

### கந்தளாய் அனர்த்தம்

## 58 சடலங்கள் மீட்பு 86பேரைக் காணவில்லை

திருகோணமலை, ஏப். 27

கந்தளாயில் கண்டெடுக்கப்பட்ட 58 சடலங்களில் பெரும்பாலான சடலங்கள் அடையாளங் காணப்படாமலேயே புதைக்கப்பட்டுள்ளன.

இத்தகவல் கந்தளாய்ப் பொலீஸ் நிலையத்தில் நடந்த வெள்ளிக்கிழமை நடந்த மாநாடு ஒன்றில் வெளியானது.

எண்பத்தாறு பேர்களைக் காணவில்லை என்று அவர்களின் உறவினர்கள் பொலீஸில் முறையிட்டுள்ளனர் என்றும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் திருமலை அரசாங்க அதிபர் திரு. டி. எம். ஆரியரத்ன, இணைப்பு அதிகாரி பிரிகேடியர் ஹார்ஷா குணரத்ன, பதில் நீதிவான் எம். கே. செல்லராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மாவிட்டபுரம் சந்திவரை வந்த சிப்பாய்கள்

காங்கேசன்துறை, ஏப்ரல் 27

மாவிட்டபுரம் சந்திக்கு நேற்று சிப்பாய்கள் வந்தபோது பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

காங்கேசன்துறை துறைமுகம் வந்துள்ள கப்பல் ஒன்றில் இருந்து சாமான் இறக்குவதற்காக லொறி ஒன்றைக் கொண்டு செல்லவே சிப்பாய்கள் நேற்றுக் காலை 10 மணி அளவில் வந்தனர்.

சொற்ப நேரத்தில் லொறியை எடுத்துக் கொண்டு கீரிமலை வீதி வரை சிப்பாய்கள் சென்றனர்.

நீண்டநாள் இடைவெளிக்குப் பின் நேற்று சிப்பாய்கள் வந்தது குறிப்பிடத்தக்கது.

### சுபநேரம்

27 4- 1986

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:
8 59 முதல் 10 29 வரை
ராகுகாலம்:
4.29 முதல் 5 59 வரை
இவை சகலருக்கும் இயங்கும் நேரங்கள்

### பருத்தித்துறையில் ஷெல் குண்டு

யாழ்ப்பாணம், ஏப் 27

பருத்தித்துறையிலுள்ள பொலீஸ் இராணுவக்கூட்டு முகாமிலிருந்து நேற்று காலை முதல் நண்பகல் வரை சிறிது நேரம் விட்டு விட்டு ஷெல் குண்டுகள் ஏவி விடப்பட்டன.

இதனால் இப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

இந்த ஷெல் குண்டுகள் இராணுவமுகாமைச் சுற்றியுள்ள கட்டடங்களை தகர்ப்பதற்காக ஏவி விடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனால் உயிர் சேதம் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சிதம்பரம் தலைமையில் பண்டாரி வருவது ஏன்?

### அரசு வட்டாரங்களில் பெரும் ஆச்சரியம்

கொழும்பு, ஏப்ரல் 27

இந்திய மத்திய இணை அமைச்சர் திரு. பி சிதம்பரம் தலைமையில் திரு. ரொமேஷ் பண்டாரி இலங்கை வருவது, கொழும்பு அரச வட்டாரங்களில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

இனப் பிரச்சினை சம்பந்தமான பேச்சுக்களை நடத்த எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரும் இந்தியத் தூதுக் குழுவுக்கு இணை அமைச்சர் திரு. பி. சிதம்பரம் தலைமை வகிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ரொமேஷ் பண்டாரியை ஒரு முறை அனுப்புங்கள் என்று இலங்கை பலமுறை கேட்டிருந்தது.

கடைசியாக வெளிவிவகார அமைச்சர் சாஹுல் ஹமீது புதுடில்லி சென்ற சமயமும் திரு. பண்டாரியை அனுப்புங்கள் என்ற ஜனாதிபதியின் கோரிக்கையைப் பிரதமர் காந்தியிடம் சமர்ப்பித்து இருந்தார்.

இணை அமைச்சர் சிதம்பரம் தலைமையில் திரு. (4 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமானாறு பகுதியில் மீண்டும் 'ஹெலி'த் தாக்குதல்

பலாலி, ஏப்ரல் 27

நேற்று மீண்டும் தொண்டமானாறு இராணுவ முகாமை அண்டியுள்ள கிராமங்களில் ஹெலிக்கொப்டர் மூலம் சுடப்பட்டது.

சுமார் அரை மணி நேரம் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

காலை 8 மணிக்கு பலாலியில் இருந்து வயாவிளானுக்கு வந்த ஹெலிக்கொப்டர்-அங்கு ரோந்து புரிந்து சுற்றிவிட்டு உடனடியாக தொண்டமானாற்றுப்பக்கமாகவந்தது.

தொண்டமானாற்றின் தெற்குப்புறக் கிராமங்களான தம்பாலை வலலாய் பத்தமேனி, அச்சுவேலி வலைப் பக்கமாக ஹெலிக்கொப்டர் ரோந்து புரிந்தது.

முதலில் பத்தமேனியில் கூட்டமாக நின்ற மக்களை நோக்கி ஹெலிக்கொப்டர் சுட்டது. மக்கள் கலைந்து ஓடத் தொடங்கியதும் ஹெலிக்கொப்டர் அங்கும்மிங்கும் சுடத் தொடங்கியது.

அங்கிருந்து கிழக்குப் பக்கமாகச் சென்ற (4 ஆம் பக்கம் பார்க்க)

### ரூ. $2\frac{3}{4}$ லட்சம் பெறுமதியான பொருள்கொள்ளை

மட்டக்களப்பு, ஏப்ரல் 27

காத்தான்குடி ப.நோ.கூ. சங்க விற்பனை நிலையம் ஆயுதம் தரித்த நபர்களால் உடைக்கப்பட்டு சுமார் 2லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான விற்பனைப் பொருள்கள் கொள்ளை இடப்பட்டன.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு சுமார் 10·30 மணியளவில் நடந்தது.

இக் கொள்ளையை அடுத்து நேற்று சனிக்கிழமை காலை காத்தான்குடி பகுதியில் பதற்றம் நிலவிய போதிலும் அப்பதற்றம் முஸ்லிம் பிரமுகர்களால் கட்டுப்படுத்தப்பட்டது.

காத்தான்குடிபகுதியில் சுமார் 75 ஊர்காவல் படையினர் அண்மையில் நியமனம் பெற்றார்கள்.

இந்நிலையில் இக் கொள்ளை ஊர்காவல் படையினரின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு நடந்ததா? என பலரும் அங்கலாய்க்கிறார்கள்.

### பட்டிருப்பு பாலம் தகர்ப்பு

மட்டக்களப்பு, ஏப். 27

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதான போக்குவரத்துப் பாலங்களில் ஒன்றான பட்டிருப்புப் பாலம் நேற்று அதிகாலை சுமார் 3.15 மணி அளவில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

களுவாஞ்சிக்குடி- வக்கியல்ல வீதியிலுள்ள இப்பாலம் பட்டிருப்புத் தொகுதியிலுள்ள சுமார் 125 கிராமங்களை இணைக்கிறது.

பாலம் தகர்க்கப்படுவதற்கு வைக்கப்பட்ட குண்டு வெடிப்பு சத்தம் சுமார் 20 மைல் தூரம் வரை கேட்டதாகப் பொது மக்கள் தெரிவித்தனர்.

குண்டு வெடிப்பால் மண்டூர், பாலையடிவட்டை, பழுகாமம், மண்முனை, வக்கியல்ல வழியாக அம்பாறை வாகன போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது



இனப்பிரச்சினை சம்பந்தமாய்ப் பேச சிதம்பரத்தார் தலைமையிலே குழு வருகுதாம்;

அப்ப இலங்கை அரசாங்கத்துக்கு சிதம்பர சக்கரத்தைப் பார்த்த நிலைதான்!

### கூட்டணியினர் -- ராஜீவ் தனிமையில் மனம்விட்டுப் பேச்சு

## ஒரு மொழி மாநிலம் உள்ளடக்கிய தீர்வே

### அவசியம் என வலியுறுத்து

புதுடில்லி, ஏப் 26

ஒரு மொழி மாநிலம், தமிழரின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடியதான நிறைவேற்று அதிகாரங்கள்.

இவைகளை உள்ளடக்கிய தீர்வுதான் காணப்படவேண்டும்.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணி, பிரதமர் ராஜீவ்காந்தியிடம் தெட்டத் தெளிவாகக் கூறி விட்டது.

கூட்டணி - பிரதமர் சந்திப்பு கடந்த வியாழக்கிழமை இரவு இடம் பெற்றது.

கூட்டணித் தலைவர்கள் மு சிவசிதம்பரம், அ. அமிர்தலிங்கம், இரா. சம்பந்தன் ஆகியோர் பிரதமரைச் சந்தித்தனர்.

பிரதமர் தமது உதவியாளர் எவருமின்றியே (4 ஆம் பக்கம் பார்க்க)

## பார்த்தசாரதிக்கு பதவி அமைச்சர் அந்தஸ்தில்!

புதுடில்லி, ஏப். 26

மந்திரி அந்தஸ்துள்ள பதவி பார்த்தசாரதிக்கு வழங்கப் பட்டிருக்கிறது.

மறுசீரமைக்கப்பட்டிருக்கும் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை வகுப்புக் குழுவுக்கு அவர் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நாட்டின் பாதுகாப்புக் குறித்து நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய உயர் அதிகாரங்களைக் கொண்டதாக 'கொள்கைஆலோசனைக் கமிட்டி' என்ற பெயருடன் இக்குழு மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

இக்கமிட்டியின் தலைவராக அமைச்சர் அந்தஸ்துடன் திரு. ஜி பார்த்தசாரதி நியமிக்கப்பட்டுள்ளார்.

உள்நாட்டுப் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட வெளிநாட்டுக் கொள்கைகளை வகுக்கும் உயர் அதிகாரமும் இக்கமிட்டிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள்வருமாறு;

உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் திரு. கே அருண்நேரு, இணை வெளிவிவகார அமைச்சர் திரு. கே. ஆர் நாராயணன், வெளியுறவுச்செயலாளர் திரு.ஏ.பி.வெங்கடேஸ்வரன், அமைச்சர் (4 ஆம் பக்கம் பார்க்க)

### வீதித்தடை நீக்கம்

பலாலி, ஏப்ரல் 27

அச்சுவேலி செல்வநாயகபுரத்தில் போடப்பட்டிருந்த வீதித்தடை, இயக்கம் ஒன்றின் தலையீட்டினால் அகற்றப்பட்டது.

வீதித்தடை போட்டோரைக் கொண்டே தடை அகற்றப்பட்டது

செல்வநாயகபுரத்தில் இருதரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் இயக்கம் ஒன்று தலையிட்டதும், இதனை அடுத்து ஒரு தரப்பினர் வீதித் தடையை ஏற்படுத்தி போக்குவரத்தை ஸ்தம்பிதமடையச் செய்திருந்ததும் தெரிந்ததே.

## இலங்கைத் தமிழர்கள் ஹோலந்தில்ஆர்ப்பாட்டம் உண்ணுவிரதம்

ஹேக், ஏப்ரல் 26

ஹோலந்து நாட்டில் இரண்டாவது நாளாக கடந்த சனிக்கிழமையும் இலங்கைத் தமிழ் அகதிகள் ஆர்ப்பாட்டஞ் செய்தனர்.

இரண்டு நகரங்களில் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. 150 இலங்கைத் தமிழ் அகதிகள் உண்ணுவிரதமும் ஆரம்பித்துள்ளனர்.

குடியிருப்பு வசதிகள் போதா என்று கூறியே இலங்கைத் தமிழ் அகதிகள் ஆர்ப்பாட்டம் உண்ணுவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஹோலந்துப் பிரதமர் இது பற்றி நாடாளுமன்றத்தில் பேசுகையில்,

'இச்செயல்கள் மன்னிக்கப்பட முடியாதவை' என்று சொன்னார்.

இலங்கைத் தமிழ் அகதிகளின் விண்ணப்பங்கள் விரைவாகப் பரிசீலனை செய்யப்படும் என்றும் பிரதமர் சொன்னார்.

(முன்னர் வந்த செய்தி 3-ஆம் பக்கத்தில்)

# செய்திச் சாரம்

### திரிப்போலியில் ரஷ்ய ஏவுகணை

புதுடில்லி, ஏப். 26

ரஷ்யாவின் ஏவுகணைத் தாங்கிக் கப்பல் ஒன்று லிபியாவின் திரிப்போலி துறைமுகத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறது.

திரிப்போலியிலும் பெங்காசியிலும் அமெரிக்கா குண்டு வீச்சு நடத்திய பின்னர் ரஷ்ய கப்பல் இப்பகுதிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது

### 62 பேர் பலி

புதுடில்லி, ஏப். 26

உத்தரப்பிரதேசத்தில் ரிஷிகேசத்திலிருந்து பத்ரிநாத் நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ் ஒன்று இன்று சனிக்கிழமை அருகிலிருந்த ஆற்றில் சரிந்து விழுந்ததில் 42 பேர் கொல்லப்பட்டனர்.

இதேவேளை இமாசல பிரதேசத்தில் பயணிகள் பஸ் ஒன்று குடை சாய்ந்ததில் 20 பேர் கொல்லப்பட்டனர். 25 பேர் படுகாயமடைந்தனர்.

### கறுப்பு மழை பொழிந்தது!

தெஹ்ரான், ஏப். 27

ஈரான் தலைநகரான தெஹ்ரானில் 30 நிமிடங்கள் கறுப்பு மழை பெய்தது.

இம் மழையால் வீதிகள், கார்கள் எல்லாம் அழுக்காகின.

கறுப்பு மழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இருதய, சுவாசப்பை நோய்கள் வரலாம் என்று எச்சரிக்கப்பட்டது.

சல்பர், பொஸ்பரஸ் முதலிய பொருள்கள் நிறைந்ததினால் தான் மழை கறுப்பாக இருந்தது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

பல தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட தீவிபத்தின் காரணமாக எழும்பிய சல்பர், பொஸ்பரஸ் முதலியன சேர்ந்தே கறுப்பு மழையாகப் பெய்தது.

### தமிழக எதிர்ப்பே காரணம்

புதுடில்லி, ஏப். 26

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் உட்பட தமிழக அரசியல்வாதிகள் காட்டிய எதிர்ப்புக் காரணமாகத்தான் இந்தியா, இணை அமைச்சர் திரு. பி. சிதம்பரம் தலைமையில் திரு. பண்டாரியை அனுப்ப உள்ளது.

இப்படி புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் கூறின.

### மதிமுகராசா கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

இலங்கை அ.இ. மு. க. பொதுச்செயலாளர் திரு. பொன். மதிமுகராசா இனந் தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டார்.

வெள்ளிக்கிழமை காலை வண்ணை சிவன் கோயில் வீதியில் இச் சம்பவம் நடந்தது.

இவர் வடபிராந்திய 771 இலக்க தனியார் துறை பஸ் உரிமையாளர் சங்கத் தலைவரும் 15 வெகுஜன கூட்டுக்குழு அமைப்புக்களின் செயலாளருமாவார்.

### மரக்காலையில் கொள்ளை

நல்லூர், ஏப் 27

யாழ் மின்சார நிலைய வீதியில் உள்ள சனியசர் மரக்காலை ஒன்றில் வெள்ளிக்கிழமை இரவு பலலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளை இடப்பட்டன.

லொறி ஒன்றில் வந்த இனந்தெரியாத கோஷ்டியினர் காவலாளியைப் பயமுறுத்தி படுக்க வைத்துவிட்டு அங்கிருந்த ரயர்கள், சீலப்புகள், மரப்பலகைகள், என்ஜின் பம்ப் போன்றவற்றையும் சிறு தொகைப் பணத்தையும் எடுத்துச் சென்றனர்.

அருகில் உள்ள கோயில் பணமும் இவர்களால் எடுத்துச் செல்லப்பட்டது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டூர்சம்பவம்

# ஜனாதிபதிக்கு முறையீடு

யாழ்ப்பாணம், ஏப். 27 கடந்த புதன்கிழமை அதிகாலை மண்டூரிலும் சுற்றியுள்ள கிராமங்களிலும் நடத்தப்பட்ட தேடுதலின்போது நடந்த அசம்பாவிதங்கள் பற்றி ஜனாதிபதிக்கும் மட்டக்களப்பு பிரஜைகள் குழுவுக்கும் முறையிடப்பட்டுள்ளது.

தேடுதல் நடவடிக்கையின் பின் பல வீடுகளில் பணம் மற்றும் மதிப்புள்ள பொருள்கள் காணமற் போய் உள்ளன.

இத் தேடுதல் நடவடிக்கை காலை 5 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது. தேடுதல் நடவடிக்கையின் போது விசாரிக்கப்பட்டவர்களில் அரச, தனியார், கூட்டுறவு ஊழியர்களும் அடங்குவர்.

## ஊர்காவல் வீரர்கள் பிணையில்

மட்டக்களப்பு, ஏப். 27 காத்தான்குடி முஸ்லிம் அநாதைச் சிறுவர் இல்ல முகாமையாளர் தாக்குதல் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட இரு ஊர்காவல்படை வீரர்களும் தலா 2 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இம்மாதம் 8ஆம்திகதி அல் ஹாஜ் எம். எம். ஏ. அஸீஸ் ஹாஜியார் என்பவரைத்தாக்கி வீதிவழியே ஊர்வலமாக அழைத்துச் சென்றனர் என்ற சந்தேகத்தின்பேரில் இரண்டு ஊர்காவல் வீரர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

அலியார், பதுார்தீன் ஆகிய இரு ஊர்காவல்படை வீரர்களும் பொலீஸ் விசாரணையின் பின்பு மட்டக்களப்பு பதில் நீதிபதி திரு. கே. வேலுப்பிள்ளை முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

## உள்ளூர் தொலைக்காட்சி சேவையில் மாற்றங்கள்

நல்லூர், ஏப். 27 மே மாதம் முதலாம் திகதி முதல் உள்ளூர் தொலைக்காட்சி சேவைகளில் மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளன.

இது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இதனடிப்படையில் மே மாதம் முதலாம் திகதி முதல் யாழ். மாவட்ட ரீதியில் ஒழுங்கமைக்கப்பட்ட தொலைக்காட்சி சேவையை வழங்கும் திட்டம் ஒன்று உருவாகியுள்ளது.

இதற்கென தமிழீழ மாணவர் பேரவையினால் 7 பேர் கொண்ட கட்டுப்பாட்டுக் குழுஒன்றும் அமைக்கப்பட்டது.

இந்த வகையில் மே மாதம் முதல் மாணவர்களுக்கும் மக்களுக்கும் பயன்தரக் கூடிய வகையில் முடிந்தவரை சிறப்பான சேவை வழங்குவதற்கு கட்டுப்பாட்டுக் குழு முயற்சிகளை மேற்கொள்ளும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை ஆதரவு மாநாட்டில் பஞ்சாப் முதல்வர்

சென்னை, ஏப் 27 இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவு தெரிவித்து மே மாதம் 4 ஆம் திகதி சென்னையில் நடைபெறும் மாநாட்டில் பஞ்சாப் முதலமைச்சர் சுர்ஜித்சிங் பர்னலாவும் கலந்து கொள்வார்.

அப்படி தான் கலந்து கொள்ள வசதி ஏற்படாத பட்சத்தில், அமைச்சர் ஒருவரை அல்லது கட்சி முக்கியஸ்தர் ஒருவரை அனுப்பி வைப்பதாக திரு. பர்னலா, மாநாட்டை ஏற்பாடு செய்துள்ள தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதிக்கு அறிவித்துள்ளார்.

இந்திய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பலர் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## மோட்டார் சைக்கிள்கள் கடத்தப்பட்டன

கல்முனையில் கடந்த இரண்டு தினங்களில் நான்கு மோட்டார் சைக்கிள்கள் கடத்தப்பட்டன.

இவற்றில் மூன்று முஸ்லிம்களுடையவை. ஒன்று தமிழருடையது.

இச்சம்பவங்கள் காரணமாக கல்முனைப் பகுதியில் பதற்றம் நிலவியது.

## கல்முனை-யாழ் பஸ்சேவையை மீண்டும் ஆரம்பிக்கக் கோரிக்கை

மட்டக்களப்பு, ஏப் 27 கடந்த சில மாதங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ள கல்முனை — யாழ்ப்பாணம் இ.போ. ச. பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என அம்பாறை மாவட்ட தமிழ் — முஸ்லிம்கள் இ போ. சபை வலியுறுத்துகிறார்கள்.

யாழ், கல்முனை இரு டிப்போக்களும் இணைந்து தினமும் மேற்படி சேவையை நடத்தி வந்தன.

இச்சேவை தற்போது இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதால் அம்பாறை மாவட்டத்தில் உள்ள அரச ஊழியர்கள் மாணவர்கள், வர்த்தகர்கள் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் — கல்முனை பயணிகள் ஒரு நாள் மட்டக்களப்பில் கழித்துத்தான் தற்போது பயணம் செய்யவேண்டி உள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள பயணிகள் நலன்கருதி மீண்டும் இச்சேவை ஆரம்பிக்கப்பட வேண்டுமென வற்புறுத்தப்பட்டு வருகிறது.

## கிளிநொச்சி பிரஜைகள் குழு செயலிழந்த நிலையில் உட்பூசல் காரணமாம்

கிளிநொச்சி, ஏப்ரல் 27 கிளிநொச்சிப் பிரஜைகள் குழுவின் நிர்வாகத்திடையே எழுந்துள்ள உட்பூசல் காரணமாக கிளிநொச்சிப் பிரஜைகள் குழு இரண்டுபட்ட நிலையில் இருந்து வருகிறது. அதன், செயற்பாடுகள் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

கிளிநொச்சிப் பிரஜைகள் குழுவின் சென் திரேசா ஆலயத்திலிருக்கும் அலுவலகமோ நிரந்தரமாக பூட்டப்பட்ட நிலையில் காணப்படுகிறது. மக்களோ பிரஜைகள் குழுவினர் எங்கே எனக் கேட்டு அங்கத்தவர்களின் இருப்பிடங்களை நோக்கிப் படையெடுக்கத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை பொறுப்பு வாய்ந்த பதவிகளிலுள்ள சிலர்தமது பதவியில் இருந்து ராஜினாமா செய்துள்ளதாக சில பத்திரிகைகளில் செய்திகளும் வெளியாகி இருந்தன

இந்நிலையில் கிளிநொச்சிப் பிரஜைகள் குழு பொதுக்கூட்டத்தைக் கூட்டி புதிய நிர்வாக சபை ஒன்றைத் தெரிவு செய்யுமா? அல்லது தற்போதுள்ள நிர்வாகமே உட்பூசல்களை மறந்து செயற்படுமா என பக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இக்குழு இரண்டுபட்ட நிலையில் ஸ்தம்பிதமடைந்ததால் பல உதவி வழங்கும் நிறுவனங்கள் தங்கள் உதவிகளை வழங்க பின்வாங்குவதாகவும், இவ் உதவிகளைப் பெறுவதற்காக பொதுமக்கள் பலரும் பல தடவைகள் அலையவேண்டிய நிலை உருவாகியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது

கடந்த பல மாதங்களுக்கு முன்னர் பொது ஸ்தாபனம் ஒன்றினால் அகதிகளுக்கென வழங்கப்பட்ட பால்மா இறுதியில் பழுதடைந்த நிலையில் சில அகதிமுகாம்களில் விநியோகிக்கப்பட்டதாக முகாம் பொறுப்பதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## கிளிநொச்சியில் யானைகளின் அட்டகாசம் அதிகரிப்பு

உருத்திரபுரம், ஏப் 27 கிளிநொச்சிப் பகுதியில் காட்டுயானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது இதனால் பொதுமக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

புது முறிப்பு, ஊற்று, கந்தன் குளம், செல்வா நகர், அக்கராயன் குளம் பகுதிகளிலேயே யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது.

கடந்த ஒரு மாதகாலத்தில் இருவர் யானைகளினால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர். பலரின் குடிசைகள் யானைகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளன. பயிர்கள் அழிக்கப்பட்டுள்ளன.

யானை ஒன்றினால் தனது சகோதரன் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டதால் மனமுடைந்த தாதிப் பெண் ஒருவர் தற்கொலை செய்து கொண்ட பரிதாப சம்பவம் ஒன்றும் கடந்த வாரம் கிளிநொச்சியில் நடந்தது.

விவசாயிகளிடம் துப்பாக்கிகள் இல்லாததே யானைகளின் அட்டகாசம் கூடியதற்குக் காரணமாகும்

## தேவை

முல்லைத்தீவில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் கிறீம் கவுஸ் ஒன்றிற்கு அனுபவமுள்ள ரீமேக்கர், சப்பிளையர், மற்றும் சிற்றுண்டி வகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை. 1.5, 86க்கு முன்னர் நேரில் வரவும்.

முகவரி எஸ் உதயகுமார் ஈஸ்வரி றேடர்ஸ், முல்லைத்தீவு.

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## பரீட்சை முடிவுகள் இவர்களுக்கு எப்போது?

நல்லூர், ஏப். 27 கலவரத்தால் பாதிக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணத்திற்கு வந்து இங்கிருந்து ஜீ. சீ. ஈ. பரீட்சை எடுத்த பரீட்சார்த்திகளுக்கு இதுவரை பரீட்சை முடிவுகள் கிடைக்கவில்லை.

இது சம்பந்தமாக பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் கடந்த செவ்வாய் அன்று யாழ் கல்விப் பணிப்பாளரைச் சந்தித்து முறையிட்டனர்.

கல்விப்பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டதன் பயனாக இந்த வாரத்தில் பரீட்சை முடிவுகள் யாழ் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## திருமலையில் இருவருக்கு மின்கம்ப தண்டனை

திருகோணமலை, ஏப். 27 மின்கம்ப மரண தண்டனை விதிக்கப்பட்ட இரண்டு ஆண்களின் சடலங்கள் திருமலைநகரை அடுத்துள்ள மூன்றும் கட்டைச் சந்தியில் கண்டு பிடிக்கப்பட்டன.

இச்சடலங்கள் செல்லத்துரை என்றழைக்கப்படும் அந்தோனிமுத்து யோசப் (வயது 55), செல்வராசா மகேந்திரன் (வயது 32) ஆகியோருடையவை என்று அடையாளங் காணப்பட்டன

திருகோணமலை பதில் நீதிவான் திரு. எம். கே செல்லராசா மரண விசாரணைகளை நடத்தினார்.

## இளைஞர் இன்னும் தடுத்து வைப்பு

பூநகரி, ஏப்ரல் 27 பூநகரி இராணுவத்தினரால் அண்மைக்காலமாக கைதுசெய்யப்பட்ட இளைஞர்களில் இராமலிங்கம் சந்திரபாலா என்பவர் கிளிநொச்சி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இது சம்பந்தமாகமேற்படி இளைஞரின் பெற்றோர் பூநகரி பிரஜைகள் குழுவுக்குமுறையிட்டுள்ளனர்

இது சம்பந்தமாக பிரஜைகள் குழு அரசஅதிபர் மட்டத்தில் நடவடிக்கை எடுத்துள்ளது. தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனையவர்கள் படிப்படியாக விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## பால் கொள்வனவு செய்யச் சென்ற நால்வர் வீடு திரும்பவில்லை

மட்டக்களப்பு. ஏப். 27 மட்டக்களப்பு வடமுனை பகுதிக்கு பால் கொள்வனவு செய்யச் சென்ற நால்வர் வீடு திரும்பவில்லை.

சித்தாண்டி கிராமத்தைச் சேர்ந்தவர்களே மேற்படி நால்வருமாவர்.

இந்நால்வரும் கடந்த புதன்கிழமை பால் கொள்வனவு செய்ய சைக்கிளில் சென்றனர். பின் வீடு திரும்பவில்லை.

அதே நேரம் வடமுனை செல்லும் பாதையில் இரு சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கிடந்தன.

இச்சடலங்கள் இந் நால்வரில் இருவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## கல்முனையில் கேபிள் தொகுதி சேதம்

கல்முனை, ஏப் 27 கல்முனையில் தொலைத் தொடர்பு நிலையத்தின் நிலத்துக்கு அடியிலான கேபிள் தொகுதி இரைனட் வீச்சினால் சேதம் அடைந்தது.

இதனால் கல்முனைப் பகுதியில் சுமார் 550 தொலைபேசிகள் செயலிழந்தன.

## குறைந்த செலவில் வீடுகள்

உடுவில், ஏப். 27 உடுவில் உதவி அரச அதிபர் பகுதியில் குறைந்த செலவில் மேலும் பல வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இது சம்பந்தமாக ஆராய உடுவில் உதவி அரச அதிபர் திரு ஆ. மகாலிங்கம் தலைமையில் கூடிய விசேஷ குழு தகுந்த நடவடிக்கை எடுத்துவருகிறது

## இலங்கை அ. தி. மு. க. மேதின ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஏப். 27 இலங்கை அண்ணா தி மு க வின் மேதின ஊர்வலம் யாழ் இவன் கோவிலடியில் இருந்து ஆரம்பமாகும் சிவன் முன்றலில் பொதுக் கூட்டம் நடைபெறும்.

இலங்கை அண்ணா தி மு. க. பொதுச் செயலாளர் பொன் மதிமுகராசா தலைமையில் நடந்த கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

மேதின ஒழுங்கினைகவனிக்க பத்துப் பேர் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

இக்குழுவுக்கு திரு.செ. சவுந்தரராஜன் தலைமை வகிப்பார்.

இத்தக் குழு வெகுஜன கூட்டு அமைப்புடன் இணைந்து செயற்படும்;

அத்துடன் 27 ஆம் திகதி நடைபெற இருந்த ஆர்ப்பாட்டப் போர் முரசு ஊர்வலத்தை மற்றொரு தினத்துக்கு நடத்துவது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## காமினி இராஜினாமா செய்ய வேண்டும் - சிறிமா

கொழும்பு, ஏப்ரல் 27 சுந்தளாய்க்குள அணைக்கட்டு உடைப்புக்கு நீர்ப்பாசனத் திணைக்களமே பொறுப்பு ஏற்க வேண்டும். அதற்குப் பொறுப்பான அமைச்சர் காமினி திஸநாயக்கா பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும்.

இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அறிக்கை ஒன்றில் கோரியிருக்கின்றார்.

இந்தியாவில் நடந்த ரயில் விபத்துக்கு அந்த நாட்டு ரயில்வே அமைச்சர் பதவி துறந்தார்.

இப்படிப் பதவி துறந்த சம்பவங்கள் வெளிநாடுகளில் இடம் பெற்றுள்ளன.

அவற்றைப் பின்பற்றி அமைச்சர் காமினி திஸநாயக்காவும் பதவி துறப்பாரா?—

இப்படி திருமதி பண்டாரநாயக்கா கேட்டிருந்தார்.

## பெண்ணுக்கு மரண தண்டனை

திருகோணமலை, ஏப் 27 திருகோணமலை, மூன்றும் கட்டைச் சந்தியில் மேலும் ஒரு மின்கம்ப மரணதண்டனை விதிக்கப்பட்ட பெண்ணின் சடலம் வெள்ளி காலை காணப்பட்டது

பெண்ணின் பெயர் ஏ. மனோன்மணி, வயது 34. 5 குழந்தைகளின் தாய்.

காதில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் இச் சடலம் மின்கம்பத்தில் கட்டப்பட்டிருந்தது.

## மக்கள் முகம்

### அம்பாள் குளம் முருகன் ஆலய நிர்வாகிகள்

கிளிநொச்சி அம்பாள் குளம் ஸ்ரீமுருகன் ஆலய நிர்வாகிகள் தெரிவு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. என் பேரம்பலம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்:— நா. மோகன், செயலாளர்— செ. சபாரத்தினம் பொருளாளர்— த பரமலிங்கம் உபதலைவர்: எம். இராமையா உப செயலாளர்— என். சந்தனம்.

ஏழு பேர் கொண்ட நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

### கந்தசுவாமிகோயில் திருப்பணிச்சபை

தாளையடி, ஏப் 27 மருதங்கேணி கந்தசுவாமிகோயில் திருப்பணிச்சபை, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலின் அங்கீகாரத்துடன் அண்மையில் அங்குராரிப்பணம் செய்யப்பட்டது.

தலைவர்; திரு. க சுறுவல்தம்பி (கிராமசேவையாளர், செம்பியன் பற்று)செயலாளர்: திரு. எஸ் வி. கணேஷ் (அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் (செம்பியன்பற்றுஉபஅலுவலகம். பொருளாளர்; திரு. நா) செல்லையா (வர்த்தகர்) உபதலைவர்: திரு. மு. கந்தப்பு, உபசெயலாளர்: திரு மு. கணேசலிங்கம்.

### மல்லாகம் தேவாலய வீதி விழிப்புக்குழு

மல்லாகம் தேவாலய வீதியில் ஒரு விழிப்புக் குழு அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டது.

புதிய நிர்வாகிகள் விவரம் வருமாறு;

தலைவர்:தே. யோசெப் உபதலைவர்: வே. திஜயாத்துரை செயலாளர்: சி. மகாலிங்கம் பொருளாளர்; வே. குலசிங்கம் 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது.

## பயங்கர அனுபவங்களை சந்தித்தவர் ஜெய்சங்கர்

பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஜெய்சங்கரை எனக்குத் தெரியும். நல்ல நடிகராக, நல்ல மனிதராக கண்ணியத்தோடு, அன்போடு என்னிடம் அவர் நம்புக்கொண்டிருக்கிறார்.

இப்படிக் கூறுகிறார் பழம் பெரும் டைரக்டர் கர்ணன். அவர் மேலும் கூறுகையில்,

"பெண்ணே நீ வாழ்க" தமிழ்ப்படத்தின் வாயிலாகத்தான் ஜெய்சங்கரின் அறி

தினசரி சினிமா

முகம் எனக்குக் கிடைத்தது.

அந்தப் படத்தில் அவரைக் கதாநாயகனாகப் போட முடிவெடுத்தபொழுது மலர்ந்த முகத்தோடு, இளமைத் துள்ளலுடன் படப்பிடிப்புக்கு ஜெய் வந்த காட்சி இன்னும் என் கண்களைவிட்டு மறையவில்லை.

காதல், கோபம், சண்டை, சோகம் போன்ற பலவிதமான உணர்ச்சிகளுடன் அந்தப் படத்தில் ஜெய் நடித்தபொழுது "இவர் படவுலகில் பிரபலமாவார், பல பதற்கு ஏற்றவர்" என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது

அதற்குப் பின் அவரைக் கதாநாயகனாக வைத்து நான் தயாரித்த பல படங்களில் அதை அவர் உறுதிப்படுத்தினார்.

"காலம் வெல்லும்" படத்தில் அவர் நடித்தபொழுது அவுட்டோரில் வேகமாகக் குதிரைமீது ஏறிவந்து தரையில் கிடந்த துப்பாக்கியை எடுத்து எதிரிகளைச் சுட்டு வீழ்த்தியதுபோல் ஒரு மெய்சிலிர்க்கும் காட்சியைப் படமாக்கினேன்.

துப்பாக்கியை அவர் எடுக்கக் குதிரையில் இருந்தவாறே குனிந்த பொழுது கால் வழுக்கி விட்டது. நழுவிய காலுடன் குதிரை அவரைச் சுமார் அரை மைல் தூரம் இழுத்துக்கொண்டே போயிற்று.

நாங்கள் பதறிக் கொண்டு ஓடினோம். ஆனாலும் அவர் சமாளித்துக்கொண்டே கையை உயர்த்தி அசைத்து எங்களுக்குக் காதில் விழும்படியாக 'எனக்கு ஆபத்து எதுவும் இல்லை. கவலைப் பட வேண்டாம்!'' என்று குரல் கொடுத்தார்.

அப்படிப்பட்ட பயங்கரமான பல அனுபவங்களுக்கு ஜெய் சங்... இருக்கிறார்' என்றார்.

## சுன்னாகம் சந்தை ஒளிமயமானது

உடுவில், ஏப் 27 சுன்னாகம் சந்தை ஒளியூட்டப்பட்டுள்ளது. நீண்ட நாட்களின் பின் சந்தை ஒளியூட்டப்பட்டதற்காக அதனைச் செய்த இளைஞர்களை பொது மக்களும் வர்த்தகர்களும் பாராட்டுகிறார்கள்.

சந்தையும், டவுண்ஹோலும் இருண்டு கிடந்தது. இருப்பதை யாழ் அபிவிருத்திசபை, சுன்னாகம் உபசபைக்கு அங்குள்ள பலபொது ஸ்தாபனங்களும் — பிரஜைகள் குழுவும் சுட்டிக்காட்டியும் எவ்வித பலனும் ஏற்படாதிருந்தது.

இப்படி இருக்க கடந்த சிலநாட்களாக இளைஞர்கள் குழு ஒன்று பழுதடைந்த மின்குமிழ்களை மாற்றி புதிய குமிழ்களை பொருத்தி சந்தையை ஒளியூட்டியது.

### எங்கள் தேவை

**FEVER SCAN TM**

The space age thermometer from U.S A.

Now you can say goodbye to clumsy, uncomfortable glass (mercury) thermometers Fever scan is here. The space age thermometer that reads out your body temperature digitally in 15 seconds. Unbreakable Fever Scan can be used over and over again, thousands of times. Its simple design makes it especially suited to use on infants All you've to do is place flush on forehead and it reads out the temperature in 15 seconds. Tested by doctors Accepted by hospitals. Price Rs 45|- Distributed by-Jee Krish Enterprises 189. Grousalt Road, Chundikuli. Jaffna T'Phone: 23186, Also available at leading Pharmacies.

## புனிதமான இயக்கங்களுக்கு

எமது வீட்டிலிருந்து தங்களால் எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களில் (எமது உருக்கமான வேண்டுகோளுக்கிணங்க) வெளிநாட்டுப் பயணத்துக்கான பொருட்களை மீண்டும் எம்மிடம் ஒப்படைத்ததற்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

ஏற்கனவே பத்திரிகையில் வெளிவந்த விபரப்படி எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களின் பெறுமதி மூன்று இலட்சம் அல்ல என்பதையும் அதற்கு மிகக் குறைவானதே என்பதையும் இத்தால் அறியத்தருகின்றோம்.


மேலும் மனமிரங்கி எனது கஷ்ட நிலையையும் குடும்ப நிலையையும் மனதில் கொண்டு இன்னும் சில பொருட்களையும் திருப்பித் தந்துதவும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்

கந்தையா இராசதுரை

அராலி வடக்கு.
செட்டியாமடம்.

### 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
07-08-1919
மறைவு
07-04-1985
திதி- 27-4-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து அயராது உழைத்து எங்களை வாழவைத்த தெய்வமே! எங்களை மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு மறைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். நினைவில் வாழும் மனைவி பிள்ளைகள்.

தகவல்:-
ஆர் கணேசன்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

வெளியிலே பெரும்புயல் வீசியபோதிலும் உள்ளே சாந்தி இருக்குமாயின் வெளிப்புயல், சூறாவளி எம்மை ஒன்றும் செய்ய மாட்டா.

-ஜேம்ஸ் அலன்

உதயன்
இல. 15, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 27-04-86 தொலைபேசி: 24805 22073 த பெ. 23

# அணு ஆயுதங்களை சுட்டுவீழ்த்தும் ஏவுகணை

## அமெரிக்கா பரீட்சித்தது

வாஷிங்டன், ஏப்ரல் 26

அணு ஆயுதங்களைச் சுட்டு வீழ்த்தக் கூடிய ஏவுகணை ஒன்றை அமெரிக்கா வெற்றிகரமாகப் பரீட்சித்துள்ளது

அமெரிக்கா தனது விண்வெளிப் போராட்ட ஆராய்ச்சித் திட்டத்தின் ஒருபகுதியாகவே, இப் புதிய அதிவேக ஏவுகணையைத் தயாரித்துள்ளது.

இப்புதிய ஏவுகணையானது ஒளியைவிட அதிவேகமாகச் சென்று, ஒரு சிறிய இலக்கை வெற்றிகரமாகத் தாக்கக்கூடியது என்றும், இதனால் விண்வெளி போராயுத ஏவுகணை பாதுகாப்புத் திட்ட நுட்பத்தை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் 'வின்பேயர்' தெரிவித்தார்.

## லிபியாவின் புதிய பெயர்

திரிப்போலி, ஏப்ரல் 26

லிபியா இனி மகா லிபியா என்று அழைக்கப்படும்.

லிபியா ஜனாதிபதி கடாபி உத்தியோகபூர்வமாக இதனை அறிவித்துள்ளார்.

மகா சோசலிஸ மக்களின் லிபியன் அரேபிய ஜமகிரியா என்பதே லிபியாவின் புதியபெயராகும்

## ஹோலந்தில் தமிழர் குழப்பம்

ஹோலந்து, ஏப். 26

ஹோலந்து நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தாங்கள் தங்கியிருந்த புகலிடங்களை சேதமாக்கினர்.

மேலும் வசதிகள் தமிழ் அகதிகளுக்கு செய்து கொடுக்கப்படமாட்டா என்று நலன் புரி அமைச்சர் எல்சோ பிரஸ்மோர் நாடாளுமன்றத்தில் அறிவித்ததைத் தொடர்ந்தே இலங்கைத்தமிழ் அகதிகள் இச்செயலில் ஈடுபட்டனர்.

5 நகரங்களில் உள்ள 850 தமிழ் அகதிகள் தான் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இந்த அகதிகளுக்கு தற்காலிக முகாம் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

கலவரங்கள் தொடர்பாக 27 தமிழ் அகதிகள் கைது செய்யப்பட்டனர்.

## கையை அழுகவிட்டு உடலுக்கு புனுகு பூசும் புத்திசாலிகள்!

இலங்கையின் பிரதம அமைச்சர் திரு ஆர் பிரேமதாச வெளிநாட்டில் அவருக்கு அடுத்த பிரதான அமைச்சரான நிதி மந்திரி திரு ரொனி டி மெல்லும் வெளிநாட்டில்

பின்னவர் நிதி மந்திரி என்பதால் நிதி சேகரிப்பதற்கு என்றே — பண உதவி பெறுவதற்கு என்றே வெளிநாட்டில் பிரயாணம் செய்கிறார். அது அவருக்குத் தலை எழுத்து. அதுவே அவரது தொழிலில் பெரும் பகுதியும் கூட!

பிரதமர் வெளிநாடு சென்றிருப்பதன் அடிப்படை நோக்கமும் பண உதவி பெறுவதற்கான சாதக நிலையை உண்டாக்குவது அவர்; அங்கு ஆற்றிவரும் உரைகள் அதனை நன்கு புலப்படுத்துகின்றன.

தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்படாமல் அவர்கள் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள். அதன் விளைவாக அவர்கள் உரிமைப் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள். அதனை மழுங்கடிப்பதிலும் அவர்களின் அடிப்படை உரிமைகளை நசுக்குவதிலும் இலங்கை அரசு தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. எல்லாவற்றுக்கும் உச்சக்கட்டமாக இராணுவத் தீர்வு சார்ந்த நடவடிக்கைகளை எடுத்து தமிழ் மக்களைச் சொந்த மண்ணிலே அகதிகளாக்கி வருகிறது. நாளுக்கு நாள் இராணுவ நடவடிக்கைகளை இறுக்கித் தமிழ் மக்களைக் கொன்று குவித்து வருகிறது

இந்த உண்மையை மேற்கு நாடுகள் உட்பட உலக நாடுகள் பலவும் இப்போது புரிந்தும் உணர்ந்தும் வருகின்றன. இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி, வெளியுறவு அமைச்சர் திரு. பகத் ஆகியோரும் மனித உரிமைக் கமிஷன் கூட்டத்தில் திரு. தில்லானும் ஆற்றிய உரைகள் உலக நாடுகள் உண்மை நிலையை அறிவதற்குப் பெரிதும் உதவின

அதன் பலனாக இலங்கைக்கு சர்வதேச சமூகத்தில் இருந்து கிடைக்கும் உதவி குறைந்து போகலாம் என்ற மனப்பயம் அரசாங்கத்துக்கு ஏற்படுவது இயல்பே.

அபிவிருத்தித் திட்டங்களுக்கு என்று வெளிநாடுகளில் இருந்து நிதி உதவியை வலது கையால் வாங்கி, இராணுவச் செலவுக்கு இடது கையால் ஒதுக்கி வருகிறது இலங்கை அரசாங்கம்.

உலக நாடுகளில் இருந்து கிடைக்கும் 'அபிவிருத்தி' உதவிப் பணம் குறைந்து விட்டால் இராணுவச் செலவுக்கு என்ன செய்ய முடியும்? இந்த ஏக்கம் இலங்கை அரசின் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறது போலும்!

அதனால் அமைச்சர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி தமக்குச் சாதகமான முறையில் பிரசாரம் செய்ய அரசு நினைத்திருக்க வேண்டும்

நிதி அமைச்சர் அதிகாரப் பரவலாக்கல்— ஒருவித கபாடசி பற்றி வாஷிங்டனில் பேசியதும், இலங்கையில் நடப்பது இன உரிமைப் பிரச்சினை அல்ல என்று பிரதமர் பிரிட்டனில் பேசியதும் அதனையே நிருபிக்கின்றன.

இந்த ஏமாற்று வித்தை எத்தனை நாட்களுக்கு நின்று பிடிக்கும்? "கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு" என்பது சிறு பிள்ளைகளுக்கும் விளங்கும். நாட்டின் அரச கட்டிலில் இருப்பவர்களுக்கு அது கூடவா விளங்கவில்லை?

பயங்கரவாதம் என்று அவர்கள் வர்ணிக்கும் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு மூல காரணம் இனப்பிரச்சினை. அதனைத் தீர்க்க நடவடிக்கை எடுக்காமல் பயங்கரவாதத்தை ஒழிக்கப் போவதாக அரசும், அதன் மந்திரிப் பிரதானிகளும் அடிக்கடி கூறிவருகிறார்கள்.

அதே பாணியில், இனப்பிரச்சினையைத் தீர்த்துவிட்டு, கறைபடியாத கையினால் வெளிநாட்டு உதவியை வாங்க நினைக்காமல், உண்மைக்கு மாறானவற்றைக் கூறி வெளிநாட்டு உதவியைப் பெற முயற்சிக்கப்படுகிறது. இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணமல் தமது ஆட்சிக் காலத்தை நீடிக்க இது ஒரு யுக்தி

காயப்பட்ட கைக்கு மருந்து கட்டிச் சிகிச்சை செய்யாமல் அதனை அழுகி மணக்க விட்டுவிட்டு, உடம்புக்கு அத்தரும் புனுகும் பூசும் புதுமை வைத்தியத்தில் இலங்கை அரசு இறங்கி இருக்கிறது இது ஒருபோதும் இலங்கை நாட்டைக் காப்பாற்றாது என்பதை அந்தப் புத்திசாலிகள் உணர வேண்டும்.

## மேற்கு ஜெர்மன் பிரதமர் கோல்ட் இன்று இந்தியா வருகை

புதுடில்லி, ஏப். 26

மேற்கு ஜெர்மன் பிரதமர் டாக்டர் ஹெல்மட் கோல்ட் இன்று ஞாயிற்றுக்கிழமை புதுடில்லி வருகிறார்.

ஜெர்மன் தொழில் அதிபர்கள், வங்கியாளர்களும் இவருடன் வருகிறார்கள்.

பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்பத் துறைகளில் இந்தியாவும், மேற்கு ஜெர்மனியும் ஒத்துழைக்க ஜெர்மன் தூது கோஷ்டியினரின் விஜயம் வாய்ப்பை ஏற்படுத்தி இருப்பதாக புதுடில்லியில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் ஹெல்மட் கோல்ட் பயங்கரவாதப் பிரச்சினை பற்றியும் இந்தியத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவார்,

இந்தியாவினால் கோரப்படும் பயங்கரவாதிகளை இந்தியாவுக்கு திருப்பி அனுப்ப மேற்கு ஜெர்மனி விருப்பம் தெரிவித்துள்ளது

## கம்பூச்சியாவில் 1000 ஆண்டு இந்து கோயில்

புதுடில்லி, ஏப். 26

கம்பூச்சியாவில் உள்ள 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்து ஆலயம் ஒன்றை இந்தியா பராமரிக்கும்.

இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

எதிர்வரும் அக்டோபரில் இருந்து 6 ஆண்டுகளுக்கு இந்த பராமரிப்புப் பணிதொடர ஒப்பந்தம் வழிவகுக்கிறது.

## அதிபர் றேகனின் 22,000 மைல் தூரப்பயணம் ஆரம்பம்

வாஷிங்டன். ஏப். 26.

அமெரிக்க அதிபர் றேகன் ஜப்பானுக்கான 22 ஆயிரம் மைல் பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

இவரது ஜப்பானிய பயணத்தின்போது அதிபர் றேகன் இந்தோனேஷியாவுக்கும் செல்வார்.

இந்தோனேஷியாவின் பாலீ தீவில் இந்தோனேஷியாவின் அதிபர் சுஹார்ட்டோவுடன் இவர் பேச்சு நடத்துவார்,

அதிபர் றேகன் கைத்தொழில் நாடுகளின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்ளவே ஜப்பான் செல்கிறார்.

சுதந்திர சாசனத்தை நோக்கித் தாம் பயணத்தை ஆரம்பித்திருப்பதாகக் வாஷிங்டனில் இருந்து புறப்படும்போது அவர் கருத்துத் தெரிவித்தார்.

### வெளிநாட்டுப் பத்திரிகையாளர் வெளியேற்றம்


திரிபோலி, ஏப். 26

லிபியாவிலுள்ள பெருந்தொகையான வெளிநாட்டுப் பத்திரிகையாளர் அவசர அவசரமாக வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

லிபிய அரசின் உத்தரவை அடுத்தே இவர்கள் வெளியேறிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

நெருக்கடியான கட்டத்தில் இவ்வளவு தொகையான பத்திரிகையாளர்களைத் தமது நாடு வைத்திருக்க முடியாதிருப்பதாகவும் வசதியீனமே காரணமெனவும் லிபியா தெரிவித்துள்ளது.

எனினும் பதற்றமின்றி காலம் தாழ்த்தாது பத்திரிகையாளர் அனைவரும் வெளியேறிவிடவேண்டும் எனவும் மேலும் அறிவித்துள்ளது.



**பொய்யாமொழி**

குறள்:

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.

பொருள்:

ஒழுக்கம் தவறுதலால் குற்றம் உண்டாவதை அறிந்து, மனவலிமை உடைய சான்றோர் ஒழுக்கத்தில் தவறாமல் காத்துக்கொள்வர்.

## இனப்பிரச்சினை தீர்வு மிகச் சிக்கலானது

### அதிகபலனை காணமுடியாது பண்டாரி கூறுகிறார்

புதுடில்லி, ஏப் 26

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பது சிக்கலானது; அதிக விளைவை எதிர்பார்க்க முடியாது.

இப்படி முன்னாள் வெளியுறவு அமைச்சர் திரு. ரொமேஷ் பண்டாரி புதுடில்லியில் தெரிவித்தார்.

இணை அமைச்சர் பி சிதம்பரத்துடன் ஏப்ரல் 29இல் வரவுள்ள திரு. பண்டாரி.

தமிழரின் குறைகள் தீர்க்கப்படவேண்டும். அவர்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படவேண்டும். அதற்கேற்றவாறு அரசியல் தீர்வு காணப்படவேண்டும்' என்றும் சொன்னார்.

இதனிடையில் இலங்கை அரசின் புதுயோசனைகள் குறித்து மேலும் விளக்கங்கள் பெறவே இந்தியக்குழு இலங்கை வரவுள்ளதாக புதுடில்லி அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

## தம்பலகமத்தில் 500 வீடுகள் சேதம்

திருகோணமலை, ஏப். 27

கந்தளாய் அனர்த்தத்தினால் தம்பலகமம் கிராமத்திலும் 500 க்கு அதிகமான வீடுகள் தரைமட்டமாகின.

நடுப்பரப்பந்திடல், குஞ்சுப்பரந்தன் திடல், கட்டாம்புளி, நாயன்மார்திடல் ஆகிய பகுதிகளில் தான் இவ்வீடுகள் சேதமடைந்தன.

இதனிடையில் கந்தளாய்ப் பகுதியில் இறந்த 53 பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

84 பேரைக் காணவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது.

## தமிழரைக் கொல்வதுடன் கலாசாரத்தை அழிப்பதும் இலங்கை இனவாத அரசின் திட்டம்

சென்னை, ஏப். 26

ஸ்ரீலங்கை இனவாத அரசின் இன்றைய நடவடிக்கை தமிழரைக் கொல்வது மட்டும் அல்ல! தமிழரின் கலாசார அம்சங்களை அழிப்பதுமே.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் சொன்னார்.

பொலிற்பிரோக் கூட்ட முடிவில் திரு. அமிர்தலிங்கம் மேலும் சொன்னதாவது!

இந்து, கிறிஸ்தவக் கோயில்களின் புனிதத்தை மாசுபடுத்துவதில் இலங்கைப்படைகள் ஈடுபட்டுள்ளன.

பேச்சுக்கள் நடத்துவதற்குச் சாதகமான முறையில் நடித்துக் கொண்டு, இனக்கொலையில் ஈடுபடுவது தான் இலங்கை அரசின் எண்ணம்.

இந்துக் கோயில்கள் அழிக்கப்படுவது பெரும்பாலும் 1983 இல் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. 75 இந்துக் கோயில்கள் வரை 1983க்கு பின் அழிக்கப்பட்டு விட்டன

இப்படி திரு அமிர்தலிங்கம் சொன்னார்.

### ஈழம் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி உரிமை கோரியது பற்றியும் விசாரணை

கொழும்பு, ஏப். 27.

கந்தளாய்க்குள அணைக்கட்டு உடைப்புக்கு ஈழம் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி உரிமை கோரியுள்ளது பற்றியும் அரசு நியமிக்கும் குழு விசாரணை நடத்தும்.

இப்படி காணி, காணி அபிவிருத்தி, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் சொன்னார்.

பொறியியலாளர் அலெக்ஸாண்டர் கிப்ஸ் என்பவரும் கந்தளாய் அனர்த்தம் பற்றி விசாரிக்கும் குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனிடையில் கந்தளாய்ச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள், காணாமற் போனவர்கள் பற்றிய புள்ளி விபரங்களைச் சேகரிப்பதில் திருமலை அரசாங்க அதிபர் திரு. எம். ஆரியரத்தின ஈடுபட்டுள்ளார்.

## சிப்பாய்கள் வழங்கிய புதிய ரக தண்டனை

கல்முனை, ஏப் 27

பொத்துவில் பகுதியிலிருந்து உத்தரவுப்பத்திரம்பெற்று காட்டு மரங்களை ஏற்றி வந்த நபர் ஒருவர் உத்தரவுப் பத்திரத்தில் சொல்லப்பட்டதிற்குக் கூடுதலாக மரங்களை ஏற்றிவந்தாராம்.

கோமாரி முகாம் சிப்பாய்களிடம் அவர் அகப்பட்டபோது சிப்பாய்கள் அவருக்கு புதிய தண்டனை ஒன்றை வழங்கினர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:—

காட்டுமரங்களை உத்தரவுப் பத்திரம் பெற்று கோமாரியினூடாக லொறி ஒன்றில பிரஸ்தாப நபர் ஏற்றிவந்தார்.

கோமாரி இராணுவ முகாமில் வைத்து லொறி, மரங்கள், உத்தரவுப்பத்திரம் ஆகியவைகள் சோதனையிடப்பட்டன. உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டதிற்கு அதிகமாக காட்டுமரங்கள் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது.

உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டதிற்கு மேலதிகமாக இருந்த மரங்களை பறிமுதல் செய்த சிப்பாய்கள் வந்த நபருக்குப் புதியரக தண்டனையும் வழங்கினர்.

200 சாப்பாட்டுப் பார்சல்கள் வாங்கிவரும் படி அந்நபர் சிப்பாய்களால் பணிக்கப்பட்டாராம்.

நபர் 200 பார்சல்கள் வாங்கிவந்தார் சிப்பாய்களின் முன்னிலையில் கிராம மக்களுக்கு அப்பார்சல் விநியோகிக்கப்பட்டன'

# நீங்கள் வாழ்வில் வளம் பெற இயேசு ஜீவனை கொடுத்தார்

வளம் பெறுதல் என்பது அழகான ஒரு வார்த்தையாகும்.

நீங்கள் வளம்பெற வேண்டும் என்று இயேசு கிறிஸ்து மிக விரும்புகிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் வாழ்க்கையில் வளம்பெறவேண்டும் என்பதற்காகவே இயேசு ஜீவனைக் கொடுத்தார்.

இன்னும் சொல்வேனாகில் இயேசு நமது வாழ்க்கையில் உற்பத்தியைப் பெருக்கிற மிகுந்த கனிகள் இருப்பதை விரும்புறார்.

அதைப் பெறுவதற்கு நாம் வேதவசனத்தில் உறுதியுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

கலாத்தியர் 3:13- ஐப் படித்துப் பாருங்கள்.



'கிறிஸ்து நமக்காகச் சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீக்கலாக்கி மீட்டுக் கொண்டார்.

ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்டவாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலேயே பெறும்படியாகவும் இப்படியாயிற்று'.

கவனியுங்கள். யார் செய்து முடித்தது?— இயேசு.

அவர் என்னசெய்தார்?— நம்மை மீட்டுக் கொண்டார்.

எதிலிருந்து நம்மை மீட்டார்? நியாயப் பிரமாணத்தின் சாபத்தில் இருந்து

எப்படி?

மரத்திலே தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காகச் சாபமாகினார்.

எதற்காக?

ஆபிரகாமுடைய ஆசீர்வாதம் புறஜாதிகளாகிய நமக்கு கிறிஸ்துவின் மூலம் உண்டாகும்படியாக அப்படியானார்.

இது தேவனுடைய வசனம்.

உங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமானால் அதைக் குறித்து தேவன் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஒருவேளை நீங்கள் இவ் வசனத்தைக் குறித்து அடிக்கடி கேட்டிருக்கிறேன் என்று சொல்லலாம்.

ஆனால் நான் என்ன சொல்லுகிறேன் என்பதைச் சற்றுக் கவனியுங்கள். இவ்வசனத்தில் நாம் வளம்பெற ஒருவழியிருக்கிறது.

2 கொரி 5:17 'ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின' என்று கூறுகிறது.

ஒவ்வொரு பொருளுக்கும் ஆரம்பமும், தொடக்கமுமுண்டு.

ஒரு கிறிஸ்தவனின் ஆரம்பம், தொடக்கம் எல்லாம் புதுச்சிருஷ்டியிலிருந்தே ஆரம்பமாகிறது.

உங்களுடைய ஆசீர்வாதத்தின் துவக்கமே இதுவாகத்தான் இருக்கிறது.

நீங்கள்ஒருபுதுசிருஷ்டி.

நீங்கள் ஒரு புதுவாழ்வைப்பெற்றிருக்கிறீர்கள்.

பழையவைகள் ஒழிந்தன.

பழைய வாழ்க்கையிலுள்ள பயம், பாவம், கோபம், பிசாசின் கட்டுகள் எல்லாம் ஒழிந்து போயின.

உங்களுக்குப் புது வாழ்க்கை, புதிய துவக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

உங்கள் புதுவாழ்க்கையில் கிறிஸ்துவின் மூலம் எல்லாவற்றையும் செய்ய உங்களால் முடியும்.

நீங்கள் இப்பொழுது அசாதாரணமானவர் என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது

இதை வாய் விட்டுச் சொல்லுங்கள்

தேவனுடைய வசனம் உங்கள் வாழ்க்கையில் கிரியை செய்ய இடம் கொடுக்கும்பொழுது உங்கள் வாழ்க்கையில் மிகப் பெரிய காரியங்களைச் செய்ய உங்களால் முடியும்.

## சூழ்ச்சிப் பொறியில் சிக்கி இறந்த ஊர்காவல் படையினர்

யாழ்ப்பாணம், ஏப். 27

உன்னியாவில் இரு ஊர்காவல் படைவீரர்கள் இறந்தனர்.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை வருமாறு!

கன்னியா தமிழ் மக்கள் ஏற்கனவே தமது இல்லங்களில் இருந்து வெளியேறி இருந்தனர்.

அப்படியாக அவர்கள் வெளியேறிய வீடொன்றில் எமது வீரர்கள் முற்கூட்டியே சூழ்ச்சிப் பொறி வைத்திருந்தனர்

கடந்த 24 ஆம் திகதி இவ்வீட்டில் ஊர்காவல் படையினர் கொள்ளையிட முயன்றபோது இச் சூழ்ச்சிப்பொறியில் அகப்பட்ட இரு ஊர்காவல் படையினர் இறந்தனர். மூவர் காயமடைந்தனர்.

இச் சம்பவத்தின் போது எம்மவர்களால் ஒரு துப்பாக்கி கைப்பற்றப்பட்டது.

மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Computer Programming**

Weekend Classes

Commencement— 27 - 4 - 86

Cantabia Institute

(Pioneers in Computer Education)

21, MAIN STREET, JAFFNA. T'Phone: 24201



# உதயன்

27 04 1986 ஞாயிற்றுக்கிழமை



தபால் மூலம் ஆங்கிலக் கல்வி

வெளிநாடு செல்வோர், உயர் கல்வி கற்ப வர்கள், மாணவர்கள், இல்லத்தரசிகள் அனை வருக்கும் ஏற்றது. இலவச விபரக்கொத்திற் கும் விண்ணப்பப் பத்திரத்திற்கும் தயவு செய்து எழுதவும்.

Cantabia Institute

21, MAIN STREET, JAFFNA, Phone: 24201


# வடக்கு, கிழக்கில் புதிய தடை முகாம்கள்

## சிப்பாய்கள் பலமும் அதிகரிக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 27

வடக்கு, கிழக்கில் மேலும் பல தடை முகாம்கள் புதிதாகத் திறக்கப் படும்.

தடை முகாம்களை பலப் படுத்தக்கூடிய வகையில் மேலும் பெரும் எண் ணிக்கையான ஆயுதப் படையினர் இந்தப் பகு திக்கு அனுப்பி வைக்கப் படுவர்.

முப்படைக் கட்டுத்தள பதி லெப்டினன் ஜெனரல் சிறில் ரணதுங்க இத னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறிய தாவது:-

கடந்த புதன்கிழமை நிகழ்ந்த குண்டுவெடிப் புக்களைப் பார்க்கும் போது தீவிரவாதிகள் பெரும் தாக்குதல்களுக் குத் தயாராகி விட்டார் கள் என்பதை எம்மால் புரிந்து கொள்ளக்கூடிய தாக இருக்கிறது.

வடக்கு, கிழக்குப் பகு தியில் உள்ள அமைதியை விரும்பும் ஒரு சில மக்களை விட்டே நான் மிகவும் கவலைப்படுகிறேன்.

தீவிரவாதிகளின் நாச வேலை காரணமாக வடக்கு, கிழக்குப் பகுதி யில் இருந்து செல்லும் சகல வாகனங்களையும் கடும் சோதனைக்குப் பின் னரே செல்ல அனுமதிக் கும்படி முப்படைக்கும் உத்தரவிட்டுள்ளேன்.

வாகனங்களில் எடுத்து வரும் பொருள்களுக்கு அவரவர்களே பொறுப்பு.

எதிர்பாராத பொருள் கள் ஏதும் கண்டு பிடிக் கப்பட்டால் அது குறித்து விசாரித்து தண்டிக்கவும் டணிக்கப்பட்டிருக்கிறது.

இப்படிச் சொன்ன அவர், வடபகுதி மீள விரைவில் ஆயுதப்படை யினரின் கட்டுப்பாட்டிற் குள் கொண்டுவரப்படும் எனவும் தெரிவித்தார்.

# மே முதலாம் திகதி தொடக்கம் அடகு நகை விநியோகம்

நல்லூர், ஏப் 27

அடகு வைத்தோரின் நகைகளை மே' மாதம் முதலாம் திகதி தொடக் கம் வழங்குவதற்கு மக் கள் வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக அடகு வைத்தோர் சங் கம் வெளியிட்டுள்ள அறிக்கை விவரம் வரு மாறு:

அடகு வைத்தோர் சங்கத்தினால் நடத்தப் பட்ட தொடர் மறியல் போராட்டத்தின் விளை வாக வாரம் ஒரு கிளை என்ற அடிப்படையில் அடகு நகைகள் வழங்கப் பட உள்ளன.

முதல் விநியோகத்திற் காக ஸ்ரான்லி வீதி மக் கள் வங்கியில் பணம் செலுத்தியவர்களின் நகைகள் பலாலி ஊடாக மூக்கு கொண்டுவரப்பட் டுள்ளன.

இந்நகைகள் நாளுக்கு 200 பேர் வீதம் நான்கு நாட்களுக்கு வழங்கப் படும்.

இதனைத் தொடர்ந்து பிரதான வீதி உட்பட அனைத்து மக்கள் வங்கிக் கிளைகளிலும் வாராவா ரம் நகைகள் விநியோகிக் கப்படும். இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் அடகு நகை மீட்பதற்காக பணம் செலுத்தியவர் களை எதிர்வரும் திங்கட் கிழமை காலை 8 மணிக்கு வங்கி முன் கூடுமாறு அடகுவைத்தோர் சங்கம் அறிவித்துள்ளது.

பலாலி சென்று நகை களை மீட்பதற்கான போக்குவரத்து ஒழுங்கு கள் சம்பந்தமாகவும் இவர்கட்கு அறிவுறுத்தல் கள் வழங்கப்படவுள்ளன.

## கண் நோய்

யாழ்ப்பாணம், ஏப் 27

வடபகுதியிலும் கண் நோய் வேகமாகப் பரவி வருகிறது.

தினமும் ஏராளமா னோர் சிகிச்சைக்காக யாழ் ஆஸ்பத்திரிக்கு வரு கின்றனர்.

## பஸ் சேவை ரத்து

திருகோணமலை, ஏப். 27

ஹபரணை, அநுராத புரம் ஊடாக வவுனியா வுக்கு திருமலையில் இருந்து நடத்தப்படும் பஸ் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

## திருமலை கொழும்பு பஸ் சேவை

திருகோணமலை, ஏப். 27

திருகோணமலை — கொழும்பு பஸ்சேவைகள் நீண்ட கால இடை வெளிக்குப் பின்னர் மீண் டும் ஆரம்பமாகின.

கந்தளாயில் போட்டம் காடு ஊடாகவே இப் பஸ் சேவைகள் நடைபெறு கின்றன.

## சிதம்பரம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டாரியை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவது என்ற முடிவை பிரதமர் காந்தி கடந்த வெள்ளிக் கிழமை திடீர் என்றே எடுத்ததாகத் தெரிகி றது.

1983 ஜூலைக் கலவ ரத்தின் பின்னர் அப் போது இந்திய வெளிவிவ கார அமைச்சராக இருந்த திரு. பி. வி. நர சிம்மராவ் இலங்கை வந் தார்.

அதன் பின்னர் இந்திய அமைச்சர் ஒருவர் இலங் கை வருவது இதுதான் முதல் தடவை.

ஜனாதிபதி ஜெயவர்த் தன மற்றும் அரச அமைச்சர்களுடனும் திரு சிதம்பரம் தலைமை யிலான குழுவே பேச்சுக் களை நடத்தும்.

திரு. பண்டாரி மட்டும் தனிமையில் பேச்சுக்களை நடத்த மாட்டார் என் றும் தெரிவிக்கப்பட்டுள் ளது.


### வெளிநாட்டில் வேலை வாய்ப்பு

பப்புவா நியூகினியா

(Papua New Guonea)

பதவி - பொது வேலையாட்கள்

(General Workers)

ஒப்பந்தம் - 3 வருடம்

சம்பளம் - ரூபா 10,000

மேலதிக நேரவேலை, சாப்பாடு. தங்குமிட வசதியுண்டு,

All Countries Passport உடன் 6 போட்டோ பிரதிகளுடன் 28-ம் திகதி திங்கட்கிழமைக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

முகவரி :-

கு. யோகநாதன்
"சாந்தினி"
சங்குவேலி,
மானிப்பாய்

P. செபமாலைமுத்து
புலோலி மேற்கு,
புலோலி
பொலிகண்டி.



அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உதயன் எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட்,207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் ஒழுங்கை மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

வெளியிட்ட திகதி 27-04-1986

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number Q J 60 N 86


# யாழ் மாநகர சபை மின் ஊழியர் தாக்கப்பட்டது

## குறித்து ஆணையாளர் அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

யாழ் மாநகர சபை மின்சார ஊழியர்கள் யாழ் அரசடி வீதியில் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து யாழ் மாநகர சபை ஆணையாளர் நேற்று பத்திரிகை களுக்கு விடுத்த அறிக் கை வருமாறு:-

எமது மின்சாரப் பகுதி யைச் சேர்ந்த ஊழியர் கள் 25 04 86 ஆம் திகதி அரசடி வீதிப் பகுதிக்குச் சட்டவிரோத மின்பாவனைகளைத் துண் டிக்கச் சென்றபோது சிலர் அவர்களின் கருவி களைப் பறித்ததுடன் கடமைகளைச் செய்ய விடாமல் தடுத்து, தாக் கினர் என்று எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து மின்சார ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ய முனைந்தனர்.

ஊழியர்களைத் தாக்கிய வர்களுக்கு எதிராக நட வடிக்கை எடுக்கப்படு மென்ற எனது உறுதி மொழியை ஏற்று அவர் கள் வேலைக்குத் திரும்பி இப்பொழுது வேலை செய்து கொண்டிருக்கின் றனர்.

ஆகவே ஊழியர்களைத் தாக்கியவர்களுக்கு எதி ராக இளைஞர்களும், பொது ஸ்தாபனங்களும், மன்றங்களும், பாவனை யாளர்களும், வரியிறுப் பாளர்களும் ஒன்று சேர்ந்து இனம் கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படியான நடவடிக் கைகள் எடுக்காத பட் சத்தில் முன்னைய ஆண்டு நடந்தது போல் மின் சாரம் முற்றாகத் துண் டிக்கப்பட்டு, நல்லூர் பகுதி இருளில் மூழ்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படக் கூடுமென் பதை பொதுமக்களுக்கு மனவருத்தத்துடன் அறி யத்தருகின்றேன்.

பொதுமக்களின் நலன் கருதியே மாநகராட்சி மன்ற ஊழியர்கள் கடமை செய்கிறார்கள் என்பதையும், அவர்கள் தாக்கப்படுவதற்கோ அவ மானப்படுத்தப்படுவ தற்கோ சேவையாற்ற வில்லை என்பதையும். அவர்கள் சேவையாற் றுதுபோனால் பாதிக்கப் படுபவர்கள் பொதுமக் களே என்பதையும் அறி யத்தருகிறேன்.

ஆகவே அவர்களுக்கு ஒத்துழைப்பும் பாதுகாப் பும் வழங்க வேண்டுமென சமூகத்திலுள்ள எல்லாத் தரப்பினரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படி அந்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

## தொண்டமா...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலிக்கொப்டர் அச்சு வேலி வடக்கிலுள்ள 'இராய்த் தோட்டவெளி' யில் சில நிமிடங்கள் சுட் டது

எதிர்பாராத இச்சம்ப வத்தால் தோட்டத்தில் நின்றவர்கள் அங்குமிங்கு மாகச் சிதறி ஓடினர்.

சிலர் பயிர்களுக்குள் ஒடிப் படுத்துக் கொண் டனர்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து தொண்ட மானாறு இராணுவ முகா மில் இருந்து பீரங்கி வேட்டுக்கள் பகல்முழுவ தும் கேட்டுக் கொண்டே இருந்தன.

இடைக்கிடை 'ஷெல்' குண்டுகளும் ஏவப்பட் டன. வல்லைவெளியிலும் தம்பாலைக்கு அண்மை யிலும் இரண்டு ஷெல்கள் வந்து விழுந்து வெடித் தன.

# மாணிக்கம் ராமானுஜம் கைது

## மசாசூசெட்ஸ் மாநில கல்லூரி கண்டனம்

வாஷிங்டன், ஏப். 26

ராமானுஜம் மாணிக் கலிங்கம் கைது செய்யப் பட்டது குறித்து அமெ ரிக்க மசாசூசெட்ஸ் வெல் லெஸ்லி கல்லூரி இயக் குனர் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

பேராசிரியர் சிறில் பொன்னம்பெருமா, டாக்டர் மோகன் முன சிங்க ஆகியோருக்கு மசா சூசெட்ஸ் தொழில் நுட் பக் கல்லூரிப் பேராசிரி யர்கள், அவசரத் தந்தி கள், கடிதங்களை அனுப்பி உள்ளனர்.

இந்தத் தொழில் நுட் பக் கல்லூரியிலேதான் ராமானுஜம் மாணிக்க லிங்கம் பொறியியல் படி ப்பை முடித்தார்.

இலங்கைத் தூதராக இருந்து இறந்த திரு. மாணிக்கலிங்கத்தின் மகன் ராமானுஜம்.

பயங்கரவாதத் தடுப் புச் சட்டத்தின்கீழ் ராமா னுஜம் இலங்கைப் பாது காப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள் ளார் என்பது தெரிந் ததே.

# யாழ் - கொழும்பு பஸ் சேவை ஆரம்பம்

நல்லூர், ஏப்.27

யாழ்—கொழும்பு தனி யார் பஸ்சேவைகள் சில நேற்று மீண்டும் ஆரம்ப மாகின.

இதேவேளை அநுராத புரத்திற்கான இ. போ. ச. சேவைகள் இன்று ஆரம் பமாகலாம் என்று தெரிய வருகிறது

இன்று காலை 5.30 மணிக்கும் 6 00 மணிக் கும் இரண்டு இ. போ. ச. பஸ்கள் யாழ்ப்பாணத் திலிருந்து அநுராதபுரத் திற்கு சேவையிலீடுபடும்.

இந்த இரண்டு சேவை களும் இடையூறின்றி நடந்தால் சேவை தொடர்ந்து நடத்தப் படும் என அதிகாரி ஒரு வர் தெரிவித்தார்.

# பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் நடந்த வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

பருத்தித்துறை. ஏப் 27

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியர் கள் கடந்த வியாழக் கிழமை இரு மணிநேர திடீர் வேலை நிறுத்தம் செய்தனர்.

சம்பவம் பற்றிக் கூறப் படுவதாவது:-

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் மகப் பேற்று வைத்திய நிபு ணர் வைத்திய கலாநிதி ஆர். குழந்தைவடி வேலு.

இவரது காரை இனந் தெரியாத சிலர் புதன் கிழமை இரவு 7.50மணி அளவில் எடுத்துச் சென் றனர். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அவ சர சிகிச்சைக்காக எடுத் துச் செல்வதாக அப் போது தெரிவிக்கப்பட் டது.

மேலும் இரு மணி நேரத்தில் காரை திருப்பி ஒப்படைப்பதாக அவர் கள் கூறியே காரை எடுத் துச் சென்றனர்.

ஆனால் மறுநாள் காலை வரை கார் திருப்பி ஒப் படைக்கப்படவில்லை.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியர் கள் வைத்திய நிபுணரின் கார் திருப்பி ஒப்படைக் கும் வரை தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்வ தாகத் தீர்மானித்து வியாழக்கிழமை காலை 8 00 மணி முதல் 10 00 மணிவரை வேலை நிறுத் தம் செய்தார்கள்.

இதற்கிடையில் வைத் திய நிபுணரின் கார் மீள ஒப்படைக்கப்பட்டது

காரை மீளளித்ததற்கு இப்பகுதிப் பொது மக்க ளும் வைத்திய நிபுணரும் நன்றி தெரிவித்ததுடன் பொது மக்களுக்கு அவ சர சிகிச்சை புரியும் வைத்தியர்களின் வாக னங்களை எடுத்துச்செல்ல வேண்டாம் எனவும் வேண்டிக் கொண்டார் கள்.

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஏப் 27

மூதூர் ஈச்சிலம்பற்றை யில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்று 165 கறுப்புச்சட்டைக் காரர்களால் முற்றுகை இடப்பட்டது.

அவர்களை எதிர்த்துப் போராடிய மதன் (அருள் தயானந்தராசா மூதூர்) சுரன் (செற்றிவேல் தம் பிப்பிள்ளை மூதூர்) ஆகிய இருவரும் வீரமரணம் எய்தினர்.

இவ்வாறு தமிழீழ விடு தலைப் புலிகள் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தனர்.

## வெடிக்காத குண்டு பார்வைக்கு

கரவெட்டி, ஏப்ரல் 27

தொண்டமானாற்றில் விமானத்தில் இருந்து வீசப்பட்ட குண்டு ஒன்று உடுப்பிட்டிச் சந்தியில் பார் வைக்கு வைக்கப்பட்டது.

வெடிக்காத குண்டை தமிழீழ விடுதலைப் புலிகள் எடுத்து உடுப்பிட்டி சந்தியில் மக்களின் பார்வைக்கு வைத்தனர்.

## இன்று நடப்பவை

### அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 27

பண்டிதமணி, டானி யல் ஆகியோரின் மறைவு குறித்து, அஞ்சலிக் கூட் டம் ஒன்றை இணுவிற் கலை இலக்கிய இளைஞர் வட்டம் இன்று நடத்து கிறது

இன்று காலை 9 மணி அளவில் இணுவில் அமெ ரிக்கன் மிஷன் தமிழ் கல வன் பாடசாலையில் நடை பெறும் இக்கூட்டத்தில் திரு. சோ. பத்மநாதன் பண்டிதர் அ. பஞ்சாட் சரம், பண்டிதர் வே. சண்முகலிங்கம், திரு. தெணியான், திரு. கே. தங்கவடிவேல்,திரு. நா. சிவசிதம்பரம் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்து வார்கள்.

## அன்னை திரேசா கந்தளாய் விஜயம்

திருகோணமலை ஏப்ரல் 27

அன்னை திரேசா வெள் ளிக்கிழமை ஹெலிக் கொப்டர் மூலம் கந்த ளாய்க்கு விஜயம் செய்து, பாதிக்கப்பட்ட வர்களைப் பார்வை இட் டார்.

அன்னை திரேசாவை திருகோணமலை அரசாங்க அதிபர் திரு. டி. எம். ஆரியரத்தின, இணைப்பு அதிகாரி பிரிகேடியர் ஹார்ஷா குணரத்ன ஆகி யோர் வரவேற்றனர்.

## தோட்டத்தில் குண்டு!

கொழும்பு, ஏப். 27

நுவரெலியாவில் உள்ள மரக்கறித் தோட் டம் ஒன்றில் புதைத் து வைக்கப்பட்டிருந்த இரண்டு குண்டுகள் பொலி ஸாரால் கைப்பற்றப்பட் டன.

தோட்ட உரிமையா ளர் கைது செய்யப்பட்டு பொலிஸாரால் விசா ரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

## பார்த்தசாரதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அர்ஜுன் சிங், திரு சக் கரவர்த்தி, திரு.சக்ஸேனா திரு. தாமோதரம்.

"இந்தியாவின் தேசிய பாதுகாப்புச் சபை— பார்த்தசாரதி தலைவரா கலாம்."—என்ற தலைப் பில் மார்ச் 19ஆம் திகதி 'உதயனில்' முன்பக்கச் செய்தி பிரசுரிக்கப்பட் டிருந்தது குறிப்பிடத் தக்கது

## ஒரு மொழி....,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணித் தலைவர்களைச் சந்தித்தார். இதனால் கூட்டணித் தலைவர்கள் தங்கள் உணர்வுகளை முழுமையாகப் பிரதமரி டம் வெளிக்காட்டக்கூடி யதாக இருந்தது என்று புதுடில்லி வட்டாரங்கள் கூறுகின்றன.

இருதரப்பாரும் மனம் விட்டுப் பேசினர் என்றும் அவ்வட்டாரங்கள் கூறின.

## அரசு ஆகக்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா அனுப்புகிறது. இது ஒரு குறிப்பிடத்தக்க அம்சம்.

இளை அமைச்சர் திரு பி. சிதம்பரத்தை அனுப் பியதன் மூலம் இனப் பிரச்சினையைத் தீர்ப்பது திரு. பண்டாரியிடம் மட் டும் தங்கியிருக்கவில்லை என்பதை பிரதமர், இலங்கைக்கு உணர்த்தி விட்டார்.

திரு பண்டாரி, இந்தி யாவின் சிறப்புப் பிரதி நிதியாகச் செல்லவில்லை. இந்தியப் பிரதிநிதி யாகவே செல்கிறார்.

இந்தியக் குழுவின் தலை வர் திரு. பி. சிதம்பரம் தான்.

— இப்படி திரு ஜி.கே. ரெட்டி எழுதியிருக்கி றார்.

# பொறியியலாளர் வீட்டில் கொள்ளை

## ஆட்சேபித்து வீதித்தடை

காங்கேசன்துறை, ஏப் 27

காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவன பொறியியலாளரின் தெல்லிப்பளை வீட்டில் ரூபா ஒன்றரை லட்சம் பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டன

இதை ஆட்சேபித்து நேற்று வழிமறிப்புப் போராட்டம் நடைபெற் றது.

சம்பவம் பற்றித் தெரி விக்கப்படுவதாவது:-

காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவன பொறி யியலாளர் தேவரத்தி னம் என்பவரின் வீட் டில் வெள்ளி இரவு 11 மணி அளவில் நுழைந்த ஆயுதம் தாங்கிய 25 பேர் கொண்ட கோஷ்டி அவரது மனைவியிடம் "நகை எங்கே?" என்று கேட்டது. பின்பு இக் கோஷ்டி வீட்டை சோத னையிட்டது.

அங்கிருந்து ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதி யான தாலிக்கொடி, சங் கிலி, அட்டியல் போன்ற நகைகளும், 1000 ரூபா பணமும் கொள்ளையிடப் பட்டன.

பொறியியலாளர் தலை யில் கோடரி வெட்டுக் கிலக்கானார்.

இக்கொள்ளையை ஆட் சேபித்து தெல்லிப்பளை- யாழ் வீதி, கட்டுவன்— வளவெட்டி வீதி ஆகியன வற்றில் மறியல் போராட் டம் நடைபெற்றது.

கடைகள் பூட்டப்பட் டிருந்தன. வாகன சேவை கள் ஸ்தம்பிதம் அடைந் தன.

## புலிகளுக்கு தொடர்பு?

கொழும்பு, ஏப் 27

வெள்ளவத்தை பொ லிஸ் நிலையக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் தமிழீழ விடுதலைப் புலி கள் சம்பந்தப்பட் டிருக்கலாம் என்று இரகசியப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர் பான பொலிஸ் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள் ளது

# மலையகப் பாடசாலை தமிழ் ஆசிரியருக்கு சேவை முன் பயிற்சி

கொழும்பு ஏப்ரல் 27

மலையகப் பாடசாலை களில் நியமனம் பெற உள்ள 660தமிழ்ஆசிரியர் களுக்கான சேவை முன் பயிற்சி வகுப்புக்களை நடத்த கல்விச் சேவை ஆணைக்குழு முடிவு செய் துள்ளது.

இவர்களுக்கான ஒரு ஆண்டுகால பயிற்சி கடந்த ஜனவரியுடன் முடிவடைந்தது.

ஜேர்மன் நிறுவனம் ஒன்றின் உதவியுடன் இப்பயிற்சி வழங்கப்பட் டது.

மூன்றுவாரங்கள் நடை பெறவுள்ள சேவை முன் பயிற்சி முடிந்த பின்னர் இவர்களுக்கு மலையகத் தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம் வழங் கப்படும்.

சேவை முன் பயிற்சி முடிவடையும்வரை இவர் களுக்கு தாதாரப் பத்திர மற்ற ஆசிரியர்களுக்கான சம்பளமே வழங்கப்படும்.

ஓராண்டு காலப் பயிற் சியின்போது இவர்களுக்கு மாதம் 500ரூபா மட் டுமே வழங்கப்பட்டது.

## கூலிப் படை என்கிறார் பாலகுமார்

சென்னை, ஏப்ரல் 26

ஆயுதப் படையினர் கூலிப் படையினர் தான். இந்திய செய்தியாளர் திரு கே. பி. சுனிலுக்கு அளித்த பேட்டியில் ஈழப் புரட்சி அமைப்பின் பேச்சாளர் திரு வி. பால குமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது:-

இலங்கை ஆயுதப்படை யினர், கூலிப்படையி னர் தான். பணத்துக்காக பொதுமக்களைக் கொல் கின்றனர். இதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

ஆயுதங்களைக் கீழே போடும்படி எங்களிடம் கூறுகிறார், திரு. ஜெய வர்த்தன.

முதலில் திரு.ஜெயவர் த்தன ஆயுதங்களைக் கீழே போடும்படி தனது படையினருக்குச் சொல் லட்டும்.

இப்படி பாலகுமார் சொன்னார்.

## தமிழ் கான்ஸ்டபிள் மரணம்

கொழும்பு, ஏப். 27

அளுத்கம பொலிஸில் கடமையாற்றிய கான்ஸ் டபிள் துரைராஜா துப் பாக்கிச் சூட்டுக்காயங்க ளுக்குள்ளாகி மரணமா னார்.

அவரது சொந்த ஊரான கிளிநொச்சிக்கு அவரின் சடலம் நேற்று அனுப்பி வைக்கப்பட் டது.

அநுராதபுரத்தில் எண் ணெய்க் குதத் தகர்ப்புச் சம்பவம் நடந்த அன்று தான், அளுத்கம பொலி ஸில் இருந்த கான்ஸ்ட பிள் துரைராஜாவுக்கு துப்பாக்கிச் சூட்டுக் காய ங்கள் ஏற்பட்டனவாம்.

## யுனானி கருத்தரங்கு

சென்னை, ஏப்ரல் 26

யுனானி மருத்துவக் கருத் தரங்கு ஒன்று எதிர் வரும் 3ஆம் திகதி சென்னை யில் ஆரம்பமாகும்.

## ஆசிரியர் காங்கிரஸின் மே தினம்

கொழும்பு, ஏப்ரல் 27

இலங்கைத் தொழிலா ளர் காங்கிரஸுடன் இணைந்து இலங்கை ஆசிரி யர் காங்கிரஸ் நாவலப்பிட்டி யில் மேதினக் கொண் டாட்டத்தில் பங்குபற் றும்.

ரடெல்ல சர்வதேச விளையாட்டரங்கில் இவ் விழா நடைபெறும்.


### தொழில் நுட்பக் கல்வி

புதிய 86/87 கல்வி ஆண்டு வைகாசி மாதம் ஆரம்பமாகிறது. இலத்திரனியல், மின்சார வியல், இயந்திரவியல், கட்டிடப் பொறியியல், கொம்பியூட்டர் துறைகளில் டிப்ளோமா வகுப்புகள் லண்டன் City & Guilds Institute பரீட்சைகளின் தராதரத்தில் நடத்தப்படு கின்றன. G. C. E. [O. L] சித்தியடைந்த இருபாலாரும் 10-5-86 க்கு முன் விண்ணப்பிக் கவும் விண்ணப்பப் பத்திரங்களை ரூ 5- செலுத்தி காரியாலயத்திலிருந்து பெறலாம்.

**Director,**

JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE VADDUKKODDAI.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org